### பிப்ரவரி 22–ம் தேதி முதல்

## தி.மு.க. தொகுதி பங்கீட்டுக் குழு - தோழமை கட்சிகளுடன் தொகுதிப் பேச்சுவார்த்தையை தொடங்கும்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவைத் தேர்தலுக்கான களப்பணிகளில் கழக உடன்பிறப்புகள் சுற்றிச் சுழன்று பணியாற்றி வருகின்றனர்.

வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்புத் திருத்த நடவடிக்கை நிறைவடைந்திருக்கிறது.

இதற்காக, மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்றசட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதிநகரஒன்றியக் கழகச் செயலாளர்கள்நிர்வாகிகள், சார்பு அணியினர், வாக்குச்சாவடி முகவர்கள் குழுவினர் என இலட்சக்கணக்கானோர், கடந்த சில வாரங்களாகத் தீவிர பணியாற்றி வந்துள்ளனர்.

‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை, ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’, மேற்கு மற்றும் வடக்கு மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு , டெல்டா மற்றும் தெற்கு மண்டல மகளிரணி மாநாடு என வெற்றிக்கனி பறிப்பதற்கான அடிப்படைப் பணிகளை அர்ப்பணிப்போடு செயல்பட்டு வருகிறார்கள்.

இனி வரும் நாட்களில் வீடு வீடாக, வெல்லும் தமிழ்பெண்கள் பரப்புரையை, மகளிர் படை மேற்கொள்ளவிருக்கிறது. மேலும், வாக்குச்சாவடி குழுவினருக்கு நான்கு பயிற்சி மாநாடுகள், திருச்சியில் ‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்’ மாநாடு என இடைவிடாத களப் பணிகள் ஒரு புறமும், திராவிட மாடல் அரசின் மூலம் அடுக்கடுக்கான நலத்திட்டங்களின் அமலாக்கம் மறுபுறமும் ஒவ்வொரு நாளும் நடந்து வருகின்றன. தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கான குழு அமைக்கப்பட்டு, அக் குழுவினர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் அறிந்து வருகின்றனர். இதுவரையிலும் 75,000 கோரிக்கைகளும் பரிந்துரைகளும் பெறப்பட்டுள்ளன.

வரும் 17ம் தேதி தமிழ்நாடு அரசின் இடைக்கால நிதி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர்ந்து அதன் மீதான விவாதம் நடைபெற இருக்கிறது.

மாண்புமிகு **கழகத் தலைவர்** அவர்களால் விரைவில் அமைக்கப்படவுள்ள திமுக தொகுதி பங்கீட்டுக் குழுவானது சட்டப்பேரவை அலுவல்கள் நிறைவடைந்தவுடன், **பிப்ரவரி 22ம் தேதி முதல்** தோழமை கட்சிகளுடன் தொகுதிப் பேச்சுவார்த்தையில் ஈடுபடும் என தெரிவிக்கப்படுகிறது.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை18.
நாள் ; 10,02,2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### ஒன்றிய பா.ஜ.க. அரசின் விவசாயிகள் விரோத - தொழிலாளர் விரோத கொள்கைகளை எதிர்த்து

## இன்று (பிப்.12) தொழிற் சங்க அமைப்புகள் நடத்தும் வேலைநிறுத்தத்திற்கு தி.மு.க. ஆதரவு!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

மத்திய தொழிற்சங்கங்கள், தொழில்வரி தொழிற்சங்கங்கள், துறை வாரியான தொழிற்சங்க சம்மேளனங்கள், விவசாய அமைப்புகள் இணைந்து ஒன்றிய அரசின் விவசாயிகள் விரோத, தொழிலாளர் விரோத, ஜனநாயக விரோத மற்றும் மக்கள் விரோத கொள்கைகளை எதிர்த்து நடைபெறுகிற வேலை நிறுத்தத்தில் ஒன்றிய அரசாங்கம் தன்னிச்சையாக மாநில அரசுகளை கலந்து ஆலோசிக்காமலும், தொழிற்சங்கங்களோடு முறையாக கலந்து ஆலோசிக்காமலும், நாடாளுமன்றத்தில் விவாதமின்றியே நிறைவேற்றிய 4 தொகுப்பு சட்டங்களை திரும்பப் பெற வேண்டுமென்பதும், மின்சார சட்டத்தை திருத்துவதன் மூலம் உற்பத்தி பகிர்மானம் போன்றவைகள் தனியார் மயமாக்கும் அபாயம் உள்ளதையும்,

விவசாயிகளின் விளைபொருளுக்கு நியாயமான விலை வழங்குவோம் என்ற உத்திரவாதத்தை இதுவரை நிறைவேற்றாததை கண்டித்தும், விதைகள் சட்டத்தை திருத்தம் செய்து சிறு குறு விவசாயிகள் கைவசம் உள்ள விதைகளை செயல்படாமல் செய்யும் போக்கை கண்டித்தும், மகாத்மா காந்தி ஊரக வேலைவாய்ப்பு உறுதி சட்டத்தை பெயர் மாற்றம் செய்து ஒன்றிய அரசின் பொறுப்பை தட்டிக் கழித்து மாநிலங்களின் நிதிச் சுமையை கூடுதலாக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளதை திரும்பப் பெற வேண்டுமென்பதை வலியுறுத்தியும் இன்று (பிப்.12) நடைபெறுகிற வேலை நிறுத்தத்திற்கு தொழிற்சங்கங்கள் மற்றும் விவசாய அமைப்புகள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

தொழிற்சங்கங்களின் நியாயமான கோரிக்கைகள் நிறைவேற வேண்டும் விவசாயிகளின் கோரிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டுமென்கிற நல்ல நோக்கத்தோடு திராவிட முன்னேற்றக் கழகம் போராட்டத்திற்கு தனது ஆதரவை தெரிவித்துக் கொள்கிறது.

**“அண்ணா அறிவாலயம்”**
சென்னை18.
நாள் ; 10,02,2026

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### தமிழ்நாட்டில் முக்கியமான 19 இரயில்வே திட்டங்களுக்கு

# 94 சதவிகித நிலம் இரயில்வே நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது!

### ஒன்றிய ரயில்வே அமைச்சரின் உண்மைக்கு மாறான கூற்றை ஆதாரங்களுடன் மறுத்து – அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேட்டி!

**திருச்சி, பிப்.12-**

**தமிழ்நாட்டில் ஒன்றிய அரசினால் செயல்படுத்தப்பட்டு வரும் இரயில்வே திட்டங்களுக்குத் தேவையான நிலங்களை நில எடுப்பு செய்வதில் தமிழ்நாடு அரசு காலம் தாழ்த்துகிறது என ஒன்றிய இரயில்வே துறை அமைச்சர் தெரிவித்துள்ளதாக சில நாளிதழ்களில் செய்தி வெளியாகியுள்ளது. இது தொடர்பாக போக்கு வரத்து மற்றும் மின்சாரத்துறை அமைச்சர் சா.சி.சிவ சங்கர் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (கும்ப) லிட்., திருச்சிராப்பள்ளி மண்டல அலுவலகத்தில் செய்தியாளர்களுக்கு நேற்று முன்தினம் (10.02.2026) அளித்த பேட்டி வருமாறு :-**

கடந்த 2021 மே மாதம் முதல் தமிழ்நாட்டில் ஒன்றிய அரசால் அறிவிக்கப்பட்ட இரயில்வே திட்டங்களின் முக்கியத்துவத்தை கருத்திற்கொண்டு பல ஆண்டுகளாக நிலுவையிலிருந்த இரயில்வே திட்டங்களுக்கான நில எடுப்பு பணிகளின் மீது தனிக்கவனம் செலுத்தி விரைவான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாட்டில் 148.65.30 ஹெக்டேர்ஸ் பரப்பு கொண்ட 7 திட்டங்களுக்கு (இரண்டு திட்டங்கள் மட்டுமே பெரிய திட்டங்கள்) இரயில்வே துறையினரால் நிலத்திட்ட அட்டவணை அளிக்கப்பட்டதான் அடிப்படையில் தமிழ்நாடு அரசால் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு நில எடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கூறிய இரண்டு திட்டங்களுக்காக நில எடுப்பு செய்யப்படவேண்டிய 128.41.91 ஹெக்டேர்ஸ் பரப்பில் தற்போது வரை 73.65.02 ஹெக்டேர்ஸ் பரப்பிற்கான நில எடுப்பு பணிகள் முடிக்கப் பட்டுள்ளன. இதில் மொரப்பூர் - தர்மபுரி புதிய அகல ரயில்பாதை அமைக்கும் திட்டத்தில் 4 கிராமங்களில் சட்டம் & ஒழுங்கு பிரச்சினை காரணமாக 24.78.77 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள நிலங்களுக்கு திருத்திய நிலத்திட்ட அட்டவணை இரயில்வே துறையினரால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், நில எடுப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. மேலும், திருவனந்தபுரம் கன்னியாகுமரி இடையேயான அகல இரயில் பாதை திட்டத்தை விரைந்து முடிப்பதற்குத் தேவையான 298.78 கோடி ரூபாயை இரயில்வே துறை இன்னும் வழங்கவில்லை. கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு அரசு இரயில்வே திட்டங்களுக்கு 739.31 கோடி ரூபாய் மட்டுமே நிதி வழங்கப்பட்டுள்ளதால் நில எடுப்பு பணிகளை விரைந்து முடிப்பதில் சிரமம் உள்ளது.

தமிழ்நாட்டில் தற்போது ஒன்றிய அரசின் இரயில்வே திட்டங்களுக்கு மொத்தமாக 2500.61.06 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள நிலங்களை நில எடுப்பு செய்ய நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட நிலையில் 931.52.96 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள நிலங்களுக்கு இரயில்வே துறையினரால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

இரண்டு திட்டங்களுக்கு தேவையான 296.02.95 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள பட்டா நிலங்களை நில எடுப்பு செய்திட நிர்வாக அனுமதி வழங்க அரசின் பரிசீலனையில் உள்ளது.

தமிழ்நாட்டில் முக்கியமான 19 இரயில்வே திட்டங்களுக்கு நில எடுப்பு செய்யப்பட வேண்டிய மீதமுள்ள 1273.05.15 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள நிலங்களில், 1198.02.34 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள நிலங்களுக்கான நில எடுப்புப் பணிகள் முடிவுற்று (அதாவது 94% சதவீதம்) நிலம் இரயில்வே நிர்வாகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

ஒன்றிய இரயில்வே அமைச்சர் 10.01.2025 மதுரை தூத்துக்குடி (வழி அருப்புக் கோட்டை) புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டத்தை கைவிட தமிழ்நாடு அரசு கோரியதாகவும் அதனால் இத்திட்டம் கைவிடப்பட்டதாகவும் தெரிவித்ததாக செய்தி வெளிவந்துள்ளது. இது முற்றிலும் உண்மைக்கு புறம்பான செய்தியாகும். தமிழ்நாடு அரசு ஒருபோதும் எந்தவிதத்திலும் இவ்வாறு தெரிவிக்கவில்லை, மாறாக இத்திட்டத்தை நடைமுறை படுத்தவே தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளது.

**நிலம் எடுக்கும் பணி!**

மதுரை - தூத்துக்குடி (வழி அருப்புக் கோட்டை) புதிய அகல இரயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கு இரயில்வே துறையால் நிலத்திட்ட அட்டவணைப்படி 926.68.84 ஹெக்டேர் நில எடுப்பு செய்து இரயில்வே துறைக்கு ஒப்படைக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் (மதுரை, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி) அவர்களிடம் கேட்டுக் கொண்டதில், இத்திட்டம் இரண்டு பகுதிகளாக பிரிக்கப்பட்டு நில எடுப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. இதற்கான நிர்வாக அனுமதியும் வழங்கி தமிழ்நாடு அரசால் (போக்குவரத்துத் துறை) அரசாணை (நிலை) எண்.7, நாள் 24.01.2022, அரசாணை (நிலை) எண்.65, நாள் 25.04.2023 மற்றும் அரசாணை (நிலை) எண்.134, நாள் 22.09.2023 ஆணைகள் வெளியிடப் பட்டுள்ளது.

மேற்காணும் திட்டம் உள்ளிட்ட ஏனைய இரயில்வே திட்டங்களுக்கு போதுமான நிதி ஒதுக்கீடு செய்து தருமாறு 19.08.2024 நாளிட்ட கடிதம் மூலம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், ஒன்றிய இரயில்வே அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொண்டார். அப்படியொரு கடிதம் எழுதியுள்ள நிலையில்-தமிழ்நாடு அரசு வேண்டாம் என்று கூறி விட்டது என ஒரு ஒன்றிய அமைச்சரே பொறுப்பற்ற முறையில் பேசலாமா? இத்திட்டத்திற்கான உரிய நிதி ஒதுக்கீடு செய்யுமாறு விருதுநகர், மதுரை மற்றும் தூத்துக்குடி ஆகிய மாவட்ட ஆட்சித் தலைவர்களால் 09.08.2024, 04.09.2024, மற்றும் 27.09.2024 ஆகிய நாட்களில் முறையே தென்னக இரயில்வே துறைக்கு கடிதம் அனுப்பப்பட்டு, தற்போது வரை அதற்கான பதில் ஏதும் பெறப்படவில்லை. அந்தக் கடிதத்தின் விவரங்களாவது ஒன்றிய ரயில்வே துறை அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா?



### நில எடுப்புக்கு ஒன்றிய அரசு போதிய நிதி வழங்கவில்லை!

### தமிழ்நாட்டு ரயில்வே திட்டங்களுக்கு ஒன்றிய அரசு ஓரவஞ்சனை!

மேலும், 12.12.2024 நாளிட்ட அரசுக் கடிதம் மூலம் தென்னக இரயில்வே, பொது மேலாளர் அவர்களிடம் தமிழக இரயில்வே திட்டங்கள் குறித்த தற்போதைய நிலை மற்றும் நிதி நிலை அறிக்கையை கேட்டுக்கொள்ளப்பட்டது. இது குறித்து தென்னக இரயில்வே துணைத் தலைமைப் பொறியாளர் தனது கடித நாள்19.12.2024ல் “மதுரை - தூத்துக்குடி அகல இரயில்பாதை திட்டம் தொடர்பாக மீளவிட்டான் மேலமருதூர் வரை 18 கி.மீ. அளவில் பணி முடிக்கப்பட்டுவிட்டது” என்றும் “மீதமுள்ள பிரிவுகளில் திட்டம் தொடர்வது தொடர்பாக தென்னக இரயில்வேயால் இக்கருத்துரு குறைந்த சரக்கு வாய்ப்புகள் உள்ளதால் கைவிடப்பட்டதாக” தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தினை கைவிடக்கோரி எந்த விதமானகடிதமோ, வாய்மொழியாகவோ தமிழ்நாடு அரசால் இரயில்வே துறைக்கு தெரிவிக்கப்படவில்லை, மாறாக இத்திட்டத்தை துரிதப்படுத்தவே தமிழ்நாடு அரசு இதுவரை கோரி வருகிறது. இத்திட்டத்தை “மதுரை தூத்துக்குடி தமிழக இரயில்வே திட்டத்தை கைவிடுமாறு தமிழ்நாடு அரசு ஒரு போதும் கூறவில்லை. தமிழ்நாட்டின் திட்டம் என்றாலே ஓரவஞ்சனையுடன் பார்த்து-புறக்கணிக்கும் மனப்பான்மையில் ஒன்றிய பா.ஜ.க. அரசு செயல்படலாமா? தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வரும் இத்திட்டத்தை ஒன்றிய அரசு உடனே நிறைவேற்றிட வேண்டும்”!

**இரயில்வே திட்டங்களுக்காக மாநிலம் முழுவதும் கையகப்படுத்தப்படும் நிலங்களின் விவரங்கள்.**

தமிழ்நாட்டின் குறிப்பாக முக்கியத் திட்டங்களான திண்டிவனம்-நகரி அகல ரயில்பாதை (100%), மதுரை- தூத்துக்குடி அகல ரயில்பாதை (100%), மணியாச்சி -நாகர்கோவில் அகல ரயில்பாதை (100%), கன்னியாகுமரி நாகர்கோவில் அகல இரயில் பாதை இரட்டிப்பாக்குதல் (100%), நாகர்கோவில் -இரணியல் இரயில் பாதை இரட்டிப்பாக்குதல் (100%), தூத்துக்குடி (அருப்புக்கோட்டை வழி) புதிய அகல இரயில் பாதை கட்டம் -1 (100%) சின்னசேலம் -மதுரை கள்ளக்குறிச்சி புதிய அகல ரயில்பாதை (100%) கொருக்குப்பேட்டை- எண்ணூர் நான்காவது வழித்தடம் (99%), மயிலாடுதுறை- திருவாரூர் அகல ரயில்பாதை (100%), பட்டுக்கோட்டை நான்குமுனை சந்திப்பு (100%), புதிய அகல இரயில் பாதை (சேலம் - கரூர் வழித்தடம் உருவாக்குதல்) (100%), மன்னார்குடி - நீடாமங்கலம் அகல ரயில்பாதை (100%), சென்னை கடற்கரை கொருக்குப்பேட்டை மூன்றாவது நான்காவது வழித்தடம் (100%) மற்றும் விழுப்புரம் திண்டுக்கல் அகல இரயில்பாதை (100%) ஆகிய திட்டங்களுக்கு மேலே குறிப்பிட்டுள்ளவாறு 99% முதல் 100% வரை நில எடுப்புப் பணிகள் முடிக்கப்பட்டு ஒன்றிய இரயில்வே நிர்வாகத்திடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது. எஞ்சிய நில எடுப்புப் பணிகளை விரைந்து முடிக்க முழுவீச்சில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திண்டிவனம்-திருவண்ணாமலை புதிய அகல ரயில்பாதைத் திட்டத்திற்கு 229.23.19 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள நிலங்களை நில எடுப்பு செய்ய 2011 ஆம் ஆண்டில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டும் இரயில்வே துறையினரால் நில எடுப்பிற்கு நிதி ஒதுக்கப்படாததால் நில எடுப்புப் பணிகள் அனைத்தும் முற்றிலும் முடங்கியுள்ளன.

அத்திப்பட்டு - புத்தூர் இடையிலான இரயில்வே தடத்திற்கு இரயில்வே துறையினரால் நிலத் திட்ட அட்டவணை (LPS) இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை.

**நில ஆர்ஜித பணி!**

தூத்துக்குடி-மதுரை (வழி அருப்புக் கோட்டை) புதிய அகல ரயில்பாதை இரண்டாம் கட்ட திட்டத்திற்காக 702.29.77 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள நிலங்களுக்கு நிர்வாக அனுமதி கடந்த 2023 ஆம் ஆண்டு வழங்கப்பட்டுள்ள நிலையில், இரயில்வே துறையால் நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. மேலும் நில ஆர்ஜித பணி இடங்களை கலைத்திட இரயில்வே துறையினரால் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

மொரப்பூர்- தர்மபுரி புதிய அகல ரயில் பாதை அமைக்கும் திட்டத்திற்கு 78.11.38 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள நிலங்கள் கையகப்படுத்தும் பணியில் 45.00.85 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள நிலங்களில் நில எடுப்பு முடிக்கப்பட்டுள்ள நிலையில், 4 கிராமங்களில் 24.78.77 ஹெக்டேர்ஸ் பரப்புள்ள நிலங்களுக்கு நிலம் கையகப்படுத்துதலில் சட்டம் & ஒழுங்கு பிரச்சினை ஏற்பட்டுள்ள காரணத்தினால், மாற்று வழித்தடம் அமைத்திட பரிசீலனையில் உள்ளதாக இரயில்வே துறையினரால் மாவட்ட ஆட்சியரிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நேர்வில் இரயில்வே துறையினரால் தொழில் நுட்ப முடிவிற்கேற்ப திருத்திய நிலத்திட்ட அட்டவணை 4 கிராமங்களுக்கு இரயில்வே துறையினரால் சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், நில எடுப்புப் பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

தஞ்சாவூர் - பட்டுக்கோட்டை இடையிலான 51 கி.மீ இரயில் பாதை மற்றும் மன்னார்குடி - பட்டுக்கோட்டை இடையிலான 41 கி.மீ. இரயில் பாதைத் திட்டங்களுக்கு தற்போதைய நில மதிப்பின் அடிப்படையில் அரசளவில் அனுமதி வழங்கும் பொருட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது. இரயில் பாதை அமையவுள்ள அரசு புறம்போக்கு நிலங்களைப் பொறுத்தவரையில், மேற்படித் திட்டங்களைச் செயல்படுத்த எந்தவிதமான தடைகளும் இன்றி அவ்வப்போது அரசாணைகள் பிறப்பிக்கப்பட்டு அரசு நிலங்கள் இரயில்வே துறைக்கு வழங்கப்பட்டு வருகிறது. எனவே, இரயில்வே துறையின் திட்டங்களுக்குத் தேவையான நிலங்களை நிலமெடுப்பு செய்து விரைவாக வழங்கப்பட்டு வருகிறது. இரயில்வே துறைக்கு நிலங்கள் வழங்கப்படவில்லை என்பதற்கான முகாந்திரம் எதுவும் இல்லை.

இவ்வாறு அமைச்சர் சா.சி.சிவசங்கர் தெரிவித்தார்.

மேலும் அவர் செய்தியாளர்களிடம் “தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான தமிழ்நாடு அரசு நிதி நெருக்கடிக்கிடையிலே பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங்களை உதாரணமாக விடியல் பயணத்திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண்திட்டம், தமிழ்புதல்வன் திட்டம் உள்ளிட்ட அனைத்துத் தரப்பு மக்களும் பயன் பெறும் வகையில் சிறப்பான முறையில் நலத்திட்டங்களை நிறைவேற்றி வருகிறது” என தெரிவித்தார்.